Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 59/2017 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 8 / PW8 |
| Name | : | அண்ணாமலை |
| Father Name/Husband Name | : | த/பெ. தண்டபாணி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 06.10.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA.LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( 2 வது எதிரி ஆஜர்.1வது எதிரி தற்போது இறந்துவிட்டார். ).

<u>முதல் விசாரணை</u>:

நான் காராமணிக்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் நெல்லிக்குப்பம் EIT பேரியில் பணி புரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.03.2017 ம் தேதி என்னுடைய நண்பர் செல்வகுமார் என்பவர் எனக்கு போன் செய்து அவருடைய மனைவியின் தாலியை யாரோ அறுத்து சென்றுவிட்டார்கள் என்று என்னிடம் கூறினார். அவர் உடல் ஊனமுற்றவர் ஆவார். அவர் என்னிடம் தகவல் சொல்லியவுடன் நான் காலை 11.00 மணியளவில் அவர் வீட்டிற்கு சென்றேன். அப்போது போலிசார் அங்கு வந்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். எங்களையும் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு இரண்டு நாட்கள் கழித்து சம்பந்தப்பட்டவரை பிடித்துவிட்டதாக எங்களிடம் போன் மூலம் தகவல் கூறினார்கள். நானும் ஆசிரியர் சுப்பிரமணியன் என்பவரும் நண்பர் செல்வகுமாரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு போலிசார் கோபி என்பவரையும் அறிவழகன் என்பவரையும் விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி இந்த இரண்டு நபர்களில் ஒருவர் ஆவார். இவர் பெயர் கோபி என்று கூறினார். காவல் நிலையத்தில் எதிரிகள் தாலி செயினையும், டாலரையும் வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்றும் அதனால்

அவற்றை எடுப்பதற்காக எங்களையும் அழைத்தார்கள். நானும் சுப்பிரமணி என்பவரும் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். போலிசார் ஜீப்பில் வந்தார்கள். சோழவள்ளியிலும், முள்ளிகிராம்பட்டிலும் இரண்டு இடத்திற்கு அழைத்து சென்றார்கள். முதலில் சோழவள்ளி எதிரியின் வீட்டிற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரி ஒரு தாலியும் இரண்டு காயினும் அவர் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தாலி மற்றும் காயின் அவர் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்ததாகும். **மேற்படி புகைப்படம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு முள்ளிகிராம்பட்டு கிராமத்திற்கு சென்றோம். அங்கு எதிரி அறிவழகன் என்பவர் ஒரு செயினை அவர் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் அவர் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்ததாகும். **மேற்படி புகைப்படம் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு மேற்படி பொருட்களை காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்து விட்டோம். போலிசார் எங்களை பற்றி விசாரணை செய்தார்கள்.

<u>சாட்சியை அரசுதரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>

கடந்த 11.03.2017 ம் தேதி காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசி மூலம் காவல் நிலையத்திற்கு அழைத்ததால் தான் சென்றேன் என்றால் இல்லை. நாங்கள் அதற்கு முன்னர் செல்வகுமார் வீட்டிற்குசென்றிருந்தோம். அதன் காரணமாக காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். காவல் நிலையத்தில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் போலிசார் எங்களை அவர்கள் வீட்டிற்கு அழைத்து சென்று மேற்படி பொருட்களை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் அறிவழகன் மற்றும் கோபி ஆகிய இருவரையும் தனித்தனி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகளிடம் பதிவு செய்தபோது தான் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளை அழைத்து சென்று எதிரி கோபி என்பவரின் வீட்டில் சோழவள்ளி கிராமத்தில் பகல் 2.30 மணியளவில் சா.பொ.1 புகைப்படத்தில்உ ள்ள பொருட்களை கைப்பற்றி கைபற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம்பெற்றார்கள் என்றால் சரிதான் அதன் பிறகு எதிரி அறிவழகன் என்பவரின் வீட்டிற்கு அழைத்து சென்று அவர் எடுத்து ஆஜர் செய்த சா.பொ.2 புகைப்படத்தில் உள்ள பொருளினை பகல் 3.00 மணியளவில் ஒரு கைப்பற்றுதல் மகசர் மூலம் கைபற்றி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு சம்பவம் நடைபெற்று சுமார் 8 வருடங்கள் ஆகிவிட்டால் மேற்படி

விபரங்களை என்னால் முதல் விசாரணையில் நினைவுபடுத்தி கூறிமுடியவில்லை என்றால் சரிதான்.

## எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

செல்வகுமார் என்பவர் எனக்கு எத்தனை ஆண்டு கால பழக்கம் என்றால் அவர் எனக்கு நண்பர். 60 ஆண்டு காலமாய் பழக்கம். புகார்தாரர் எப்போது எனக்கு திருடு போன விபரத்தை கூறினார் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. திருடு போன நாள் அன்று கூறினார். நான் மாலை 6.00 மணிக்கு அவர் வீட்டிற்கு சென்றேன். நான் சென்றபோது போலிசார் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளில் இருந்து இரண்டு நாட்கள் கழித்து புகார்தாரர் என்னை அழைத்தார். நான் அவர் வீட்டிற்கு சென்று அவரை அழைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்திற்கு சென்றபோது ஆஜர் எதிரியும், மற்றொரு எதிரியும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். சோழவள்ளி கிராமத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் காலையில் சென்றேன். சோழவள்ளி கிராமத்தில் எத்தனை தெருக்கல் இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சோழவள்ளி நெல்லிக்குபபம் காவல் நிலையத்தில் இருந்து எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு திசையில் உள்ளது. எப்படி சோழவள்ளிக்கு சென்றோம் என்றால் போலிசார் ஜீப்பில் தெற்கு பக்கம் சென்றார்கள். நானும், சுப்பிரமணியனும் அவர்கள் பின்னால் சென்றோம். நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் இருந்து தெற்கு பக்கம் 2 அல்லது 3 கிலோ மீட்டர் துாரத்தில் சோழவள்ளி கிராமம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் சர்க்கரைஆலையில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் தனியார் பேருந்தில் நடத்துனராக வேலை செய்தேன். ஆஜர் எதிரி கோபி எந்த பொருட்களும் எடுத்து கொடுக்கவில்லை என்றாலும் நான் சோழவள்ளிக்கு செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் வீடு எந்த பக்கத்து வாசற்படி என்றால் தெரியாது. ஆஜர் எதிரியின் வீடு கூரை வீடா, மெத்தை வீடா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தேன். போலிசார் ஆஜர் எதிரியின் வீட்டில் இருந்து என்னிடம் காட்டப்படும் பொருட்களை எடுத்து கொடுத்ததாக வந்து காட்டினார்கள் என்றால் சரிதான். முள்ளிகிராமம் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் இருந்து எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது. முள்ளிகிராமம் கிராமத்தில் சென்றபோது இறந்துபோன 1ம் எதிரியின் வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்தோம். 1ம் எதிரி என்னிடம் காட்டப்பட்ட திருடு போன பொருட்களை எடுத்து வந்து போலிசாரிடம் வெளியே கொடுத்தார். முள்ளிகிராமத்திற்கு நாங்கள் வரும்போது பகல் 1.00 அல்லது 1.30 மணி இருக்கும். பொருட்களை வாங்கிக்கொண்டு போலிசார் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டார்கள்என்றால் சரிதான். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். நகை பெற்றுக்கொண்டேன் என்று கையொப்பம் போடச்சொன்னார்கள் கையொப்பம் செய்தேன்.

அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சோழவள்ளி கிராமத்தில் ஆஜர் எதிரி கோபியின் வீடு இல்லை என்றாலும் சோழவள்ளி கிராமம் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் இருந்து தெற்கு திசையில் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நண்பருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.